1980 பிப்ரவரி 11]

3. இம் மாநிலத்தில் பாசன வளம் தற்போது மேம்பாடு அடைந்து வரும் கட்டத்தைக் கருதிப்பார்த்து இந்திய அரசுக்கு இவ்வரசு இது குறித்து எடுத்துள்ள ஏற்பாடுகள் போதுமானவை என்று தெரிவிக்கப்பட்டது.

4. சிறுபாசனத் திட்டங்களை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் மறு ஆய்வு செய்யவும் ஒருங்கிணைப்புப் பணியின் முன்னேற்றத்தைத் தொகுத்து அறிக்கை தரவும், மாநில நிலையில் ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை அமைக்கலாமென்று, 1978 மார்ச் மாதத்தில் இந்திய அரசு கருத்து தெரிவித்தது.

இதற்கிணங்க, தலைமைச் செயலாளரைத் தலைவராகவும் பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை, கூட்டுறவு துறைச் செயலாளர்கள், தலைமைப்பொறியாளர் (பாசனம்) தலைமைப் பொறியாளர் (நிலநீர்) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமைப் பொறியாளர் (பங்கிடு) தமிழ்நாட்டில் உள்ள இந்திய வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிநிதி, வேளாண்மைத்துறை இயக்குநர். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாகவும் கொண்டு (a) மேற்பரப்புப் பாசனம், (b) நிலநீர்ப்பயன் ஆகியவை குறித்து சிறுபாசனத் திட்டங்களைக் கண்காணித்து மறு ஆய்வு செய்வதற்காக மாநில நிலையில் ஒருங்கிணைப்புக் குழுவை இவ்வரசு அமைத்தது.

இணைப்பு II.

[160ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 114 க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் செடிப்பண்ணைகள் உள்ளன :—

வரிசை எண்,	செடிப்பண்ணை உள்ள இடம்,	மாவட்டம்.
	(1)	(2)
1	அரசு பழப்பண்ணை, ஆத்தூர் ..	செங்கற்பட்டு.
2	முந்திரி நாற்று மற்றும் பழத்தோட்டம்	பிச்சிவாக்கம், செங்கல்பட்டு.
3	அரசு பழப்பண்ணை, குற்றாலம்	திருநெல்வேலி.
4	அரசு பழப்பண்ணை, வாணி —	இராமநாதபுரம்

வரிசை எண், செடிப்பண்ணை உள்ள இடம்	மாவட்டம்
(1)	(2)
5 முந்திரி நாற்று மற்றும் பழத்தோட்டம் தேவக்கோட்டை.	இராமநாதபுரம்.
6 மரவள்ளிக் கிழங்குவிதைப் பெருக்கு நிலையம், தேவக்கோட்டை.	ஷ
7 முந்திரி நாற்று மற்றும் பழத்தோட்டம் நாட்டுமங்கலம்.	புதுக்கோட்டை.
8 மரவள்ளிக் கிழங்கு விதை பெருக்கு நிலையம், நாட்டுமங்கலம்.	ஷ
9 அரசு பழப்பண்ணை, வல்லத்ர கோட்டை.	ஷ
10 அரசு பழப்பண்ணை, பெரியகுளம்	மதுரை.
11 அரசு பழப்பண்ணை, கொடைக்கானல்	ஷ
12 அரசு பழப்பண்ணை, குடப்பட்டு	வட ஆற்காடு.
13 சிறப்பு வாழைத் தோட்டம், நவ்லோக் இராணிப்பேட்டை.	ஷ
14 காய்கறி விதை பெருக்கு நிலையம், பாலூர்.	தென்னாற்காடு
15 அரசு பழப் பண்ணை, தர்மாபுரம்	தர்மபுரி
16 அரசுப் பழப்பண்ணை, மளுங்குளம்	தஞ்சாவூர்
17 காய்கறி விதைப் பெருக்கு நிலையம் இனுங்கூர்.	திருச்சிராப்பள்ளி
18 சிறப்பு வாழைத் தோட்டம், முதலைப் பட்டி.	ஷ
19 அரசுப் பழப்பண்ணை, ஏற்காடு.	சேலம்.
20 பைனாப்பிள் பழப்பண்ணை, ஆத்தூர்	ஷ
21 மிளகு நாற்றுப் பண்ணை, கூடலூர்	நீலகிரி
22 பைனாப்பிள் பழப்பண்ணை, பேச்சிப் பாறை.	கன்னியாகுமரி
23 மிளகு நாற்றுப் பண்ணை, பேச்சிப் பாறை.	ஷ
24 காய்கறி விதைப் பெருக்கு நிலையம், பவானிசாகர்.	கோயம்புத்தூர்

1980 பிப்ரவரி 11]

(ஆ) மேற்குறிப்பிட்ட பண்ணைகளால் மக்களுக்குக் கிடைக்கும் பலன்கள் பின்வருமாறு :—

1. அரசு பழப் பண்ணைகள்.—தரம் மிகுந்த மா, பலா, கொய்யா, சப்போட்டா, திராட்சை, பிளம் போன்ற பழ வகை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு பயிரிடுவோர்க்குக் குறைந்த விலையில் அளிக்கப்படுகின்றன. இவை தவிர அழகு தரும் ரோஜா, மல்லிகை போன்ற பூஞ்செடி நாற்று கொடி வகைகளும் உற்பத்தி செய்யப்பட்டு தேவையுள்ளவர்களுக்கு நியாயமான விலையில் அளிக்கப்படுகிறது. மேலும் தரம் மிகுந்த பழங்கள் மற்றும் செடி வகைகளைக்குறைந்த செலவில் நவீன முறையில் உற்பத்தி செய்வது பற்றி செயல்விளக்கமும் பயிரிடுவோர்க்கு வழங்கப்படுகிறது.

2. மற்ற தனிப்பட்ட பழவகை மற்றும் பணப்பயிர் பண்ணைகள்.—முந்திரி, பைன் ஆப்பிள், மரவள்ளி கிழங்கு, சிறந்த வகை வாழை, மிளகு காய்கறி வகைகள் ஆகியவைகளின் விதை மற்றும் நாற்றுக்கள் உற்பத்தி செய்ய மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் தனித்தனிப் பண்ணைகள் உள்ளன. இவ்வகைச் செடிப்பண்ணைகளிலும் தரமான செடிகள், விதைகள் நவீன முறையில் உற்பத்தி செய்யப்பட்டு நியாயமான விலையில் பயிரிடுவோர்க்கு வழங்கப்படுகிறது. செயல்விளக்கம் மற்றும் உயர் ரக செடிகளை உற்பத்தி செய்வது பற்றிய தொழில் நுணுக்க ஆலோசனைகள் இங்குள்ள தோட்டக்கலை வல்லுநர்களால் வழங்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III.

[165ம் பக்கத்திலுள்ளஉடுக் குறியிடப்பட்ட வினா எண். 117-க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டில் தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களும், சென்னை மாநகரமும் யாணைக்கால் வியாதி பரவும் வாய்ப்புள்ள பகுதிகளாகும். இந்த பகுதிகளில் இந்நோயின் விகிதம் 6 : 4 அளவு விழுக்காடு என்று மதிப்பிடப்படுகிறது.